1979 அக்டோபர் 27]

அமைச்சர் செயலர் சொன்னார்கள். பெண்கள் வயது வரம்பு என்று பார்க்கிறபோது, வரதட்சணை போன்ற கொடுமைகள் காரணமாக 24 வயதுக்கு மேலும் கல்யாணம் ஆகாமல் பெண்கள் இருக்கிறார்கள். அப்படி இருந்தால், அந்தக் குடும்பத்திற்கு வேறு வருமானம் இருக்காது. ஆகவே, பெண்ணுக்கு வேறு வகையில் உத்யோகம் செய்து வருமானம் கிடைக்கும் வரையிலும், அல்லது கல்யாணம் ஆகிற வரைக்கும் என்கிற முறையில் விதிகளைத் திருத்த அரசு முன் வருமா ?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தற்போது அந்த உத்தேசம் இல்லை.

திருப்பத்தூரில் கூட்டுறவு இணைப் பதிவாளர் அலுவலகம்.

* வினா எண். 3— திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வட ஆற்காடு மாவட்டம் ஆம்பூரில் உள்ள கூட்டுறவு இணைப் பதிவாளர் அலுவலகத்தைத் திருப்பத்தூருக்கு மாற்றும் எண்ணம் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : வட ஆற்காடு மாவட்டம் ஆம்பூரில் இருந்த கூட்டுறவு இணைப் பதிவாளர் அலுவலகம் திருப்பத்தூருக்கு 1–6–79 முதல் மாற்றப்பட்டு விட்டது.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, ஆம்பூரில் இருந்த கூட்டுறவுத் துறை அலுவலகத்தைத் திருப்பத்தூருக்கு மாற்றியதற்கான அடிப்படை என்ன ? ஒரு ஊரில் அரசு அலுவலகம் இருக்க வேண்டும் என்று வேண்டிப் பெற்று, அங்கே இயங்கி வந்த அலுவலகத்தை திருப்பத்தூருக்கு மாற்றியிருப்பதால், ஆம்பூரில் உள்ள மக்கள் கொதிப்படைந்து இருப்பது அரசுக்குத் தெரியுமா ? அதை மீண்டும் ஆம்பூருக்குக் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, திருப்பத்தூர் நகரில் கருவூலம் இருக்கிற காரணத்தாலும், அங்கேயிருக்கிற மக்கள் விரும்பிக் கேட்டதாலும், அந்த அலுவலகம் அங்கே மாற்றப்பட்டு இருக்கிறது.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, ஒரு ஊரிலே அந்த அலுவலகத்தைத் தவிர வேறு வசதி கிடையாது. அப்படி இருக்கிறபோது, எல்லா வசதிகளையும் உடைய ஒரு இடத்தில் இன்னொரு வசதியும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கு வார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர் களே, திருப்பத்தூர் பகுதியில் இருக்கின்ற மக்களுக்கு நிரம்ப வசதிகள் இருக்கிற காரணத்தால், அதைப் பயன்படுத்திக் கொள்வதற்கு வசதியாக இருக்கும் என்ற காரணத்தால் அது திருப்பத்தூருக்கு மாற்றப்பட்டு இருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், குடியாத்தம் தாலுக்கா, வாணியம்பாடி தாலுக்கா, திருப்பத்தூர் தாலுக்கா ஆகிய இந்த மூன்று தாலுக்காக்களிலும் இருக்கக்கூடிய கூட்டு றவுச் சங்கங்களில் ஒட்டு மொத்தமாகப் பார்த்தால், குடியாத் தத்தில் மட்டும் இரண்டு மடங்கு அதிகம் இருக்கிறது. ஆகவே, அப்படிப் பார்க்கிறபோதும் கூட்டுறவுச் சங்கங்களைக் கணக்கில் கொண்டு பார்த்தாலும், கருவூலம் இருக்கிற இடத்தில் அதை மாற்ற வேண்டும் என்று கருதினாலும், அதற்குக் குடியாத்தம் சிறந்த இடமாக இருக்கும். ஆகவே, குடியாத்தத்திற்கு அந்த அலுவலகத்தை மாற்ற அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர் களே, ஏற்கனவே அது மாற்றப்பட்டாகி விட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கி றேன்.

## லேபர் காண்ட்ராக்ட் சொசைட்டி, உடன்குடி.

*வினா எண். 4—திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் தாலுக்கா உடன்குடி பேரூராட்சி மன்ற எல்லைக்குள் லேபர் காண்ட்ராக்ட் சொசைட்டிக்கு இதுவரை ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(ஆ) எந்த வேலைகளுக் கெல்லாம் அந்தத் தொகை பயன் படுத்தப்பட்டது ?

(இ) ஊழல் ஏதும் நடந்துள்ளதா ? அப்படியென்றால் நடவடிக்கையின் பேரில் யாருக்கெல்லாம் நோட்டீஸ் அனுப்பப் பட்டுள்ளது?